**S–4322**

| Sub. Code |
|---|
| 23BLT1C1 |

## B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024

### First Semester

### தமிழ்

### இக்கால இலக்கியம்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours  Maximum : 75 Marks

**பகுதி அ**  (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. 'உற்ற மருந்து சொல் வான்' – யார் என பாரதி கூறுகிறார்?

2. அழகின் சிரிப்பு என்னும் நூலை எழுதியவர் யார்?

3. கண்ணீர்ப்பூக்கள் என்னும் கவிதை நூலின் ஆசிரியர் பெயரைக் கூறுக.

4. அமுதசுரப்பிக்குப் பதிலாக மக்களின் கைகளில் இருப்பது எது என மு.மேத்தா கூறுகிறார்?

5. ஒரு பிரமுகர் என்னும் சிறுகதையின் வாயிலாக ஜெயகாந்தன் உணர்த்தும் கருத்து யாது?

6. விடியுமா என்னும் சிறுகதையின் மையக்கருவைக் கூறுக.

7. சுரங்கம் நாவல் யாருடைய வாழ்க்கையை வெளிப்படுத்துகிறது?

8. சுரங்கம் நாவலின் ஆசிரியர் யார்?

9. கொல்லிப் பாவை நாடகம் எவ்வகையைச் சார்ந்தது?

10. கொல்லிப் பாவையில் குறிப்பிடப்படும் சேர மன்னனின் பெயரைக் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) கண்ணன் என் சேவகன் என்ற பாடலில் பாரதியார் கூறும் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) வானின் அழகை அழகின் சிரிப்பு எவ்வாறு சித்தரிக்கிறது?

12. (அ) செருப்புடன் ஒரு பேட்டி என்னும் கவிதையின் வழி மு.மேத்தா கூறுவனவற்றை வெளிப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தேசப்பிதாவுக்கு ஒரு தெருப்பாடகனின் அஞ்சலி என்னும் கவிதையில் மு.மேத்தா உணர்த்தும் கருத்துக்களை விளக்குக.

13. (அ) 'விடியுமா' சிறுகதையின் கட்டமைப்பை ஆராய்க.

(அல்லது)

(ஆ) 'ஒரு பிரமுகர்' சிறுகதையில் ஜெயகாந்தன் உணர்த்தும் சமூக நீதியைக் குறிப்பிடுக.

14. (அ) சுரங்கம் குருநாவலில் இடம்பெறும் கதைமாந்தர்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) சுரங்கம் குருநாவலில் தலைமைக் கதாப்பாத்திரம் பிகாஸ் சௌடிதரியின் பண்பு நலன்களைக் குறிப்பிடுக.

15. (அ) கொல்லிப் பாவை நாடகத்தில் சேர மன்னனைக் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கொல்லிப்பாவை நாடகத்தின் வாயிலாக அறியப்படும் ஓரியின் சிறப்புகளைக் குறிப்பிடுக.

## பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. கண்ணன் என் தோழன் என்னும் பாடலின் வழி பாரதி உணர்த்தும் கருத்துக்களை எடுத்துரைக்க.

17. கன்னிப்பூக்கள் கவிதைத் தொகுப்பில் மு.மேத்தாவின் சமூகச்சிந்தனைகளை ஆராய்க.

18. கதவு என்னும் சிறுகதையின் வாயிலாக கி.ராஜநாராயணன் உணர்த்தும் கருத்துக்களை விவரி.

19. சுரங்கத்தொழிலாளர்களின் வாழ்வியலை சுரங்கம் நாவலின் வழி ஆராய்க.

20. கொல்லிப்பாவை நாடகம் சங்ககால மன்னர்களின் வாழ்வியலை சித்தரிக்கிறது என்பதை ஆராய்க.

**S–4323**

| Sub. Code |
|---|
| **23BLT1C2** |

## B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024

**First Semester**

**தமிழ்**

**நன்னூல் எழுத்தும் யாப்பருங்கலக்காரிகையும்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடர்களில் விடை தருக.

1. பாயிரம் என்றால் என்ன?

2. மாத்திரை என்றால் என்ன?

3. ஏ, வீ என்னும் ஓரெழுத்து சொல்லுக்குப் பொருள் தருக.

4. உடம்படுமெய் என்றால் என்ன?

5. ‘தெவ்’ என்னும் சொல் மகரத்தோடு புணரும் போது எச்சாரியையை பெறும்? எடுத்துக்காட்டு தருக.

6. சாரியை என்றால் என்ன?

7. அசை என்றால் என்ன? அதன் வகைகளைக் கூறுக.

8. அடி-பொருள் தந்து அதன் வகைகளைக் கூறுக.

9. செய்யுளியல் என்றால் என்ன?

10. நான்கு வகைப்பாக்களைக் கூறி அதன் ஒசைகளை எழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நூலின் வகைகள் யாவை? விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) நன்னூல் குறிப்பிடும் பத்துவகை குற்றங்களைக் குறிப்பிடுக.

12. (அ) ஒரெழுத்து ஒரு மொழி விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) மூவகை இடைநிலைகள் குறித்து விளக்குக.

13. (அ) எல்லாரும் எல்லீரும் என்னும் சொற்கள் புணரும் விதம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒரெழுத்து ஒருமொழி உருபுகளுடன் புணருமாற்றை விளக்குக.

14. (அ) குற்றியலுகரம் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) உறுப்பியலின் வாயிலாக அடி குறித்து கருத்துகளை எழுதுக.

15. (அ) வெண்பாவின் இலக்கணம் கூறி அதன் வகைகளை மட்டும் எழுதுக.

(அல்லது)

(ஆ) கலிப்பாவின் இலக்கணம் கூறி அதன் வகைகளை மட்டும் எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சார்பெழுத்துகளை எடுத்துரைத்து கட்டுரைக்க.

17. உயிரீற்றுப் புணர்ச்சியில் எண்ணுப்பெயர்கள், திசைப்பெயர்கள் அடையும் மாற்றங்களை ஆராய்க.

18. மெய்யீற்றுப் புணர்ச்சியில் லகர, ளகர புணர்ச்சி மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

19. உறுப்பியல் உணர்த்தும் சீர் வகை குறித்து கட்டுரைக்க.

20. ஆசிரியப்பாவின் இலக்கணம் கூறி அதன் வகைகளை விளக்கி எடுத்துரைக்க.

———————

| S–4324 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLTA1 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

தமிழ்

இயைபுப்பாடம் — தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு தொடர்களில் விடை தருக.

1. ‘திருமகள் போல பெருநிலச் செல்வியும்’ என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி யாருடையது ?

2. பெருங்கற் புதைவுகள் என்றால் என்ன?

3. சிலப்பதிகார கோவலனின் இறப்பிற்குக் காரணமான பாண்டிய மன்னின் பெயரைக் கூறுக.

4. குடைவரைக் கோவில்களையும் ஒரே கல்லிலான சிற்பங்களையும் முதன்முதலில் உருவாக்கிய பல்லவ மன்னவன் யார்?

5. சித்திரக்காரப் புலி, சங்கீர்ண சாதி என்று சிறப்பிக்கப்படும் மன்னன் யார்?

6. கங்கை கொண்டான், கடாரம் கொண்டான் என்று சிறப்பிக்கப்படும் மன்னின் பெயரை எழுதுக.

7. குடவோலை முறை – குறிப்பு வரைக.

8. வடகலை – தென்கலை – சிறு குறிப்பு தருக.

9. ஆங்கிலேயர்களுக்கு எதிராக தமிழகத்தில் கூட்டிணைப்பை ஏற்படுத்தியவர்கள் யாவர்?

10. மக்கள் வீட்டு வசதியைப் பெற வேண்டும் என்பதற்காக தமிழக அரசு அமைத்த வாரியங்கள் யாவை?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழகத்தின் இயற்கை அமைப்பு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழகத்தில் பயணம் செய்த அயல்நாட்டார், அயல்நாட்டார் குறிப்புகள் உணர்த்தும் செய்திகளை குறிப்பிடுக.

12. (அ) சங்ககால நில அமைப்பும், அந்நிலங்களில் மேற்கொள்ளப்பட்ட தொழில்கள் குறித்தும் எழுதுக.

(அல்லது)

(ஆ) சங்ககால உணவும் விருந்தோம்பல் பண்பும் குறித்து விளக்கி எடுத்துரைக்க.

13. (அ) களப்பிரர்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) முதல் மகேந்திரவர்மன் பல்லவர் குறித்து நீவிர் அறித்தனவற்றைக் குறிப்பிடுக.

14. (அ) சோழர்கால நிர்வாகத்துறை, வருவாய்த்துறை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) முதல் மாறவர்மன் சுந்திரபாண்டியன், முதல் கடையவர்மன் சுந்தர பாண்டியன் ஆகியோரைக் குறித்து விளக்குக.

15. (அ) நாயக்கர் வரைந்த கலைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) இந்திய விடுதலைக்கு வீரபாண்டிய கட்டபொம்மன், மருது பாண்டியர் ஆகியோர் ஆற்றிய பணிகளைக் குறிப்பிடுக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழக வரலாற்றை அறிய உதவும் அடிப்படைச் சான்றுகளை ஆராய்க.

17. சங்கால மன்னர்களைக் குறித்துத் தொகுத்துரைக்க.

18. பல்லவர்களின் சமயநிலை குறித்து கட்டுரைக்க.

19. சோழர்கால ஆட்சியில் தமிழகம் அடைந்த சிறப்புகளைத் தொகுத்துரைக்க.

20. இந்திய விடுதலைப் போரில் தமிழர்களின் பங்கை ஆராய்க.

| S–4325 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLT2C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Second Semester**

**தமிழ்**

**அற இலக்கியம்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** ($10 \times 2 = 20$)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. “கனியிருப்பக் காண்கவர்ந்தற்று” – பொருள் தருக.

2. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை கெடுவது எவ்வாறு?

3. ஞாலத்தின் மாணப் பெரிது எது?

4. ‘பகல்வெல்லும் கூகையைக் காக்கை’ – இதன் பொருளை வள்ளுவர் வழி நின்று கூறுக.

5. பொறையுடைமை – பொருள் தருக.

6. தூக்கம் இல்லாமல் இருப்பவர்கள் யாவர் என நான்மணிக்கடிகை கூறுகிறது?

7. இனியவை நாற்பது – குறிப்பு தருக.

8. நீதிநெறி விளக்கத்தின் ஆசிரியர் யார்?

9. அறயாமையால் வரும் கேடுகளாக திரிகடுகம் கூறுவன யாவை?

10. பழமொழி நானூறு – நூலின் ஆசிரியர் யார்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) விருந்தோமல் அதிகாரத்தின் வழி வள்ளுவர் கூறியனவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'செந்நன்றி அறிதல்' – அதிகாரம் கூறும் கருத்தூக்களைக் குறிப்பிடுக.

12. (அ) காலம் அறிதல் அதிகாரத்தின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழி வரையறுக்க.

(அல்லது)

(ஆ) இடன் அறிந்து செயல்படுதலின் முக்கியத்துவத்தை 'இடன் அறிதல்' அதிகாரம் என்யெனம் எடுத்துரைக்க.

13. (அ) பொறையுடைமை அதிகாரத்தில் நாலடியார் கூறியவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) நாலடியாரின் ஈகைத் தன்மை குறித்து விளக்குக.

14. (அ) பிச்சைப்புக் ஆயினும் கற்றல் மிக இனிதே, கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே, மன்றின் முதுமக்கள் வாழும் பதி இனிதே, – இப்பாடலின் வழி அறியலாகும் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) மானம் அழிந்தபின் வாழாமை முன் இனிதே, குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே, பிறன்மனை பின்னோக்கிக்காப் பீடு இனிது – இப்பாடலின் வழி இனியவை நாற்பது உணர்த்தும் கருத்துக்களை விளக்குக.

15. (அ) மரம் போக்கிக் கூலிகொண்டார், கற்றலின் கேட்டலே நன்று, கல்லாட்சி பாகம் படும் – இம்மூன்று பழமொழிகள் உணர்த்தும் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) நம் பாடப்பகுதியில் கல்வித்திறன் குறித்து பழமொழி நானூறு கூறும் கருத்துக்களைக் குறிப்பிடுக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. இனியவை கூறல், அடக்கமுடைமை அதிகாரங்கள் உணர்த்தும் கருத்துக்களை எடுத்தியம்புக.

17. தெரிந்து செயல்வகை, வழியறிதல் – இவ்விரு அதிகாரங்களின் கருத்துக்களை எடுத்துரைக்க.

18. நான்மணிக்கடிகை உணர்த்தும் கருத்துக்களை ஆராய்க.

19. நீதிநெறிவிளக்கம் நூலின் வழி அறியலாகும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

20. திரிகடுகம் உணர்த்தும் கருத்துகளை நம்பாடப்பகுதி வழி நின்று எடுத்துரைக்க.

| S–4326 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLT2C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Second Semester**

**தமிழ்**

**நன்னூல் சொல்லதிகாரமும் தண்டியலங்காரமும்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** ($10 \times 2 = 20$)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு தொடர்களில் விடை தருக.

1. தன்வினை, பிறவினை – விளக்குக.

2. முற்றெச்சம் என்னும் சொற்களின் பொருளைக் கூறுக.

3. ஈ, தா, கொடு என்னும் சொற்களின் பொருளைக் கூறுக.

4. உம்மைத் தொகைக்கு இரு எடுத்துக்காட்டுகள் தருக.

5. இடையியல் என்றால் என்ன?

6. உம் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?

7. தொடர்நிலைச் செய்யுளின் இருவகைகளைக் கூறுக.

8. "தெளிவெனப் படுவது பொருள் புலப் பாடே" – பொருள் கூறுக.

9. உருவக அணி என்றால் என்ன?

10. தற்குறிப் பேற்றுவணி என்றால் என்ன?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தெரிநிலை வினை, குறிப்பு வினையின் இலக்கணம் கூறி எடுத்துக்காட்டு தருக.

(அல்லது)

(ஆ) பெயரெச்சம் என்றால் என்ன? அதன் விளக்கி எழுதுக.

12. (அ) யாற்றுநீர் பொருள் கோள், மொழி மாற்றுப் பொருள்கோள் எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) அடுக்குத் தொடர், இரட்டைக் கிளவி குறித்து எழுதுக.

13. (அ) ஏகார, ஓகார இடைச் சொற்கள் உணர்த்தும் பொருள்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) அசைச்சொற்களை விளக்கி எழுதுக.

14. (அ) பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணத்தை தண்டியலங்காரம் வழிநின்று குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) வைதருப்ப நெறி, கௌட நெறி குறித்து எழுதுக.

15. (அ) பின்வருநிலையணி குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வேற்றுப்பொருள் வைப்பணியை விளக்கி எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. வேற்றுமையின் இலக்கணம் கூறி அதன் உருபுகள் எடுத்துக்காட்டுடன் எடுத்துரைக்க.

17. வினா, விடை குறித்து கட்டுரைக்க.

18. உயிரியல் பகுதியின் வாயிலாக எறியப்படும் கருத்துகளை தொகுத்துரைக்க.

19. செய்யுள் வகை குறித்து தண்டியலங்காரம் கூறுவனவற்றை எடுத்துரைக்க.

20. உவமையணியின் இலக்கணம் கூறி அதன் வகைகளை விவரி.

| S–4328 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLTA3 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

தமிழ்

இயைபுப்பாடம் – தமிழ் இலக்கண வரலாறு

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு தொடர்களில் விடை தருக

1. இறையனார் அகப்பொருள் – குறிப்பு வரைக

2. தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர்களின் பெயர்களைக் கூறுக

3. வெட்சித் திணை என்றால் என்ன?

4. யாப்பருங் கலக்காரிகை எத்தனை பிரிவுகளை உடையது? அவை யாவை?

5. வீரசோழியம் – சிறு குறிப்பு வரைக

6. அகப்பொருளுக்கு மட்டும் இலக்கணம் கூறும் நூல் எது?

7. நவநீதப் பாட்டியல் நூலின் அமைப்பை எழுதுக?

8. பன்னிரு பாட்டியல் எத்தனை இயக்கங்களைக் கொண்டது? அவை யாவை?

9. சந்திராலோகம் கூறும் இலக்கணம் என்ன?

10. பிரபந்த தீபிகையை எழுதியவர் யார்?

பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக

11. (அ) இலக்கணத்தால் ஏற்படும் நன்மைகள் யாவை?

(அல்லது)

(ஆ) சேனாவரையார் குறித்து விளக்குக.

12. (அ) தமிழ் நெறி விளக்கம் என்னும் நூலின் அமைப்பைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) யாப்பருங்கலம் குறித்து நீவிர் அறிவன யாவை?

13. (அ) மயிலை நாதரின் உரை இயல்பினைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) நேமிநாதம் நூல் குறித்து விளக்கி எழுதுக.

14. (அ) மாறனகப் பொருள் நூலின் இயல்பினைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) சிதம்பரச் செய்யுட் கோவை குறித்து எழுதுக.

15. (அ) தொன்னூல் விளக்கம்–குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) முத்துவீரியம் குறித்து செய்திகளைக் குறிப்பிடுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக

16. தொல் காப்பியத்தின் சிறப்பியல்புகள் குறித்தச் செய்திகளைக் கட்டுரைக்க

17. புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூலின் கருத்துக்களைப் புலப்படுத்துக

18. வெண்பா பாட்டியலில் இடம் பெறும் செய்திகளைத் தொகுத்துரைக்க

19. மாறலைங்காரம் குறித்து நீவிர் அறியும் செய்திகளைக் கட்டுரையாக்க.

20. இலக்கண விளக்கத்தில் இடம் பெறும் கருத்துக்களை விளக்குக.

---

| S–4330 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLT3C1 |

## B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024

### Third Semester

### தமிழ்

### சமய இலக்கியம்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. மூன்றாம் திருமுறை - குறிப்பு வரைக.

2. திருவெண்ணெய்நல்லூரில் இறைவன் சுந்தரரை எவ்வாறு ஆட்கொண்டார்?

3. மாணிக்கவாசகர் குறிப்பு வரைக.

4. இறைவன் உயிர்களிடத்து நிற்கும் நிலை குறித்து எழுதுக.

5. ஆண்டாள் நாச்சியார் குறிப்பு வரைக.

6. ஆண்டாள் நாச்சியார் மேற்கொண்ட நோண்பு யாது?

7. இயேசு காவியத்தை இறவா காவியம் என கண்ணதாசன் ஏன் குறிப்பிடுகிறார்?

8. கண்ணதாசன் குறிப்பு வரைக.

9. குணங்குடி மஸ்தான் சாகிபு - குறிப்பு வரைக.

10. குலோத்துங்கன் கவிதைகள் சுட்டும் பொருள் யாது?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) இறையருளை திருவிராமேச்சுரம் பதிகம் வழி தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சிவபெருமானின் தோற்றத்தை திருநாவலூர் பதிகம் வழி விளக்குக.

12. (அ) மாணிக்கவாசகர் இறைவனுக்கு சூட்டும் திருநாமங்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சொல்லிய பாட்டின் பொருள் உணர்த்து சொல்லுவதன் பயன் யாது?

13. (அ) பாவை நோன்பு மேற்கொள்வதால் உண்டாகும் நன்மைகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) திருப்பாவையில் கூறப்படும் புராணச் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

14. (அ) இயேசு காவியத்தின் நூலின் அமைப்பை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) இயேசு காவியம் தமிழ் இலக்கியத்துள் பெறும் இடம் குறித்து தொகுத்தெழுதுக.

15. (அ) குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள் தமிழுள் பெறும் இடம் குறித்து ஆய்க.

(அல்லது)

(ஆ) இசுலாமிய இலக்கியங்கள் குறித்து எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்க.

16. ஏழாம் திருமுறை பதிக செய்திகளைக் கட்டுரைக்க.

17. மாணிக்கவாசகர் எழுதிய சிவபுராணத்தில் இறைவனின் பண்புகளாகக் குறிப்பிடுபனவற்றைத் தொகுத்து எழுதுக.

18. ஆண்டாள் நாச்சியார் தோழிகளை விளித்துக் கூறும் முறை குறித்து ஆய்க.

19. இயேசுகாவியம் உணர்த்தும் இறைநெறிக் கொள்கைகளை நும் பாடப்பகுதியில் அமைந்துள்ள பாடல்களைக் கொண்டு கட்டுரைக்க.

20. குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்களில் ரகுமான் கண்ணி வழியாக அறியலாகும் கருத்துக்களைத் தொகுத்துக் கட்டுரைக்க.

———————

| S–4331 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLT3C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Third Semester**

தமிழ்

நம்பியகப் பொருளும் புறப்பொருள் வெண்பாமாலையும்

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. ஐந்திணைக்கும் உரிய உரிப்பொருள்களைக் குறிப்பிடுக.

2. கைக்கிளைக்குரிய தலைமக்கள் யார்?

3. களவின் இலக்கணம் யாது?

4. வன்புறை என்றால் என்ன?

5. தலைத் தோற்றம் குறித்து எழுதுக.

6. தழிஞ்சி என்றால் என்ன?

7. நொச்சித் திணையில் அழிபடை தாங்கல் பற்றி எழுதுக.

8. ஒள்வால் அமலை - குறிப்பு வரைக.

9. பாடாண்திணை என்றால் என்ன?

10. கந்தழி - குறிப்பு வரைக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) ஊடலைத் தணிக்கும் வாயில்கள் யாவை?

(அல்லது)

(ஆ) கற்பு காலத்துத் தலைமகளுக்கு உரிய ஒழுகலாறுகளை விளக்குக.

12. (அ) களவிற்குரிய கிளவித் தொகையினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பாங்கற் கூட்டத்தின் விரி பற்றி விளக்குக.

13. (அ) வெட்சிப் படலத்தில் தலைத்தோற்றம், புலனறி சிறப்பினைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) வஞ்சிப்படலத்தில் பேராண் வஞ்சி, உழபுல வஞ்சியினை எடுத்துரைக்க.

14. (அ) குறிப்பு வரைக :

(i) குதிரை மறம்

(ii) அழிபடை தாங்கல்

(அல்லது)

(ஆ) தும்பைப் படலத்தில் தேர்மறம், பாண்பாட்டு குறித்து விளக்குக.

15. (அ) பாடாண் படலத்தில் ஓம்படை, கொடீ நிலையைச் சான்றுடன் எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) நாள் மங்கலம், பரிசில் நிலை பற்றி விவரிக்க.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.

16. அறத்தொடு நிற்றல் குறித்துக் கட்டுரை வரைக.

17. தலைவியால் எய்தும் புணர்ச்சியின் விரியினை விவரி.

18. நொச்சிப்படலக் கருத்துக்களைக் கட்டுரைக்க.

19. வஞ்சிப்படலத்தில் அறியப்படும் செய்திகள் யாவை? விளக்குக.

20. பாடாண் திணையில் வெள்ளிநிலை, கிணை நிலை, ஆற்றுப்படை முதலியவற்றைச் சான்றுடன் வரைக.

| S–4332 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLT3S2 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Third Semester**

**தமிழ்**

**இதழியல்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours    Maximum : 75 Marks

**பகுதி அ**    (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. 'ஜெர்னல்' என்பதன் பொருள் யாது?

2. ஜனசக்தி இதழின் ஆசிரியர் யார்?

3. ஒருவரை வாய்மொழியாக இழிவுபடுத்துவது ———————— எனப்படும்.

4. ஊதியக்குழு என்பதைச் சுருக்கமாக விளக்குக.

5. UNI என்றால் என்ன?

6. செய்திக்கூட்டம் விளக்குக.

7. செய்தித்தாளின் மூன்று பிரிவுகள் யாவை?

8. SCOPS என்பதன் விளக்கம் என்ன?

9. BIG NEWSPAPER என்பது யாது?

10. CUB என்பது யாரைக் குறிக்கும்?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) இதழியல் என்பதற்கு அறிஞர்கள் தரும் விளக்கம் யாது?

(அல்லது)

(ஆ) இதழியலின் பொது அறங்கள் குறித்து விளக்குக.

12. (அ) பத்திரிகை, புத்தகங்கள் பதிவுச்சட்டம் 1867 - விளக்குக.

(அல்லது)

(ஆ) இளைஞர்கள் (தீமை கயக்கும் வெளியீடுகளட தடைச்) சட்டம் விளக்குக.

13. (அ) செய்திகளைப் பெறும் வழிமுறைகள் யாவை?

(அல்லது)

(ஆ) இந்திய செய்தி நிறுவனங்கள் குறித்து விளக்குக.

14. (அ) அச்சுப்படி திருத்துதலின்போது கடைபிடிக்க வேண்டியநெறிமுறைகள் யாவை?

(அல்லது)

(ஆ) புலனாய்வு செய்திகளைச் சேகரிக்கும் முறைகளை விளக்குக.

15. (அ) தலையங்கம் பெறும் இடத்தை ஆய்க.

(அல்லது)

(ஆ) இதழியல் மொழிநடை குறித்து நீ அறிந்தனவற்றை விளக்கு.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்க.

16. தமிழகத்தில் இதழியல் வளர்ச்சி குறித்து விளக்கி வரைக.

17. செய்தித்தாள் நிர்வாகப்பிரிவு குறித்து விளக்கி வரைக.

18. குற்றச்செய்திகள் குறித்தக் கட்டுரைக்க.

19. செய்திகள் கட்டமைப்பு குறித்துக் கட்டுரை வரைக.

20. இதழியல் கலைச்சொற்கள் குறித்து விளக்கி வரைக.

———————